15 லட்சம் டன் அரிசி சென்னைக்குத் தேவை

Regd: No. M. 5458 Phone No. 4502:

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 12—12—50 | மணி 10

இதை யூனியன் அரசாங்கம் உணருமாறு செய்யவேண்டும்

(o)

இலங்கை செய்வதை இந்திய அரசாங்கம் செய்ய முடியாததேன்?

(o)

திறமையில்லையா? மனமில்லையா?

சென்னைச் சட்ட சபையிலே மட்டுமன்று; பம்பாய் உணவு அமைச்சர்கள் மாநாட்டிலும் உணவுபிரச்னைபற்றி விவாதிக்கப்பட்டது. வாதித்துப் பயன் என்ன? தென்னாட்டவரைப் பட்டினி போட்டுக் கொல்லக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் வட நாட்டு அரசாங்கத்துக்குச் சென்னை அரசாங்கம் 'யதாஸ்து' பாடிக் கொண்டிருக்கிறவரையில், நம் சட்ட சபையில் எதைப்பற்றிவாதித்தும் ஆவப் போவதென்ன விருக்கிறது?

சென்னை அரசாங்கத்திலே ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடியைச் சமாளிக்க உடனடியாக 15 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. பிற தானியங்கள் வேறு. இதனை உடனடியாகத் தென்னாட்டுக்குச் சப்ளை செய்ய வேண்டியது வட நாட்டு அரசாங்கத்தின் கடமை என்பதை வட நாடு உணர்ந்தொழுகுமாறு செய்ய வேண்டியது சென்னை அரசாங்கத்தின் கடமையாகும். மொத்தம் இந்தியாவுக்கு 60 லட்சம் டன் உணவுப் பொருள் குறைவு ஏற்படுகிறதாம். எனினும், தன்னுடைய மொத்தத்தேவைகளைச் சென்னை அரசாங்கம் தனக்குப் போஷகராக இருந்து கஞ்சி யூற்றிவரும் மத்திய அரசாங்கத்துக்கு அறிவிக்கவும் துணிவு பெற்றில்லை யென்றால் இது மிகவும் வெட்கப்படத்தக்க விஷயமாகும்.

சென்னை, டிச. 10—

இந்த ஆண்டும் மழை பெய்யவில்லை. மற்ற வகைகளிலும் விளைச்சல் சரியாக இல்லை. அஹிம்சா வீரர்களும் தியாகிகளும் ஆட்சி செய்யும் நாட்டிலே தான் இந்த நிலை. எனவே, உணவு நெருக்கடி சிறிதளவும் தீரவில்லை; இனித் தீரவும் வழியில்லை. அரசாங்கத்திடமும் சேமிப்பு இல்லை.

சென்னை அரசாங்க மக்கள் பல ஆண்டுகளாகக் கால்வயிற்றுச்சோற்றுக் காலங் கழிக்கின்றனர். பல [illegible]ங்களில் பட்டினியால் சாகின்றனர். இந்தக் கொடிய நிலைக்கு யார் பொறுப்பாளி? சென்னை அரசாங்கமா? மத்திய அரசாங்கமா? இரண்டுமேதான். மத்திய அரசாங்கத்துக்கு நம்மைப் பற்றிக் கவலையில்லை. சென்னை அரசாங்கமோ மத்திய அரசாங்கத்தின் கால்வருடிப் பிழைக்கும் நிலையில் உள்ளது.

இந்திய அரசாங்கத்தின் முட்டாள்தனமான இறக்குமதிக்கொள்கையே நம் நாட்டுப் பஞ்சத்தின் மூலகாரணமாகும். வெளிநாடுகளிலிருந்து ஏராளமாக அரிசியை இறக்குமதி செய்தாலன்றி, இங்குப் பஞ்சம் நீங்காது. நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகையில், வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்கக்கூடாது என்று கூறுவதற்கு ஏதாவது பொருள் உண்டா?

சென்னையில் ரூ. 23,000 விலையில் கிடைத்த பஸ்களை வாங்காமல் விட்டு ரூ. 40,000 விகிதம் பல பஸ்களை இத்தாலியிலிருந்து வரவழைக்க இடங்கொடுத்த அரசாங்கம் அரிசி விஷயத்தில் ஒழுங்காக நடந்துகொள்ளாதது ஏன்? இத்தாலிய பஸ் கம்பெனி போன்ற, அரிசி வியாபாரக் கம்பெனிகள் கிடைக்கவில்லையோ?

பர்மாவில் இவ்வாண்டு நல்ல விளைச்சல். இந்திய அரசாங்கம் முயன்றால், விரைவில் அந்த அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தேவையான அளவு அரிசி பெறலாம். இலங்கை தனக்கு வேண்டிய அளவு அரிசியைப் பர்மாவிலிருந்து வ ர வ ழை த் து க் கொள்ள முடியும்போது இந்திய அரசாங்கத்துக்கு மட்டும் முடியாமற் போவதேன்? இதில் ஏதோ மர்மம் இருக்கிறதெனப் பொது மக்கள் கருத இடமேற்படுகிறதல்லவா?

சென்னை அரசாங்கத்துக்கு ஆண்மையிருந்தால், தலைக்கு 16 அவுன்ஸ் அரிசி விநியோகம்செய்ய மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். அப்படியில்லையெனின், மத்திய அரசாங்கத்துடன் நமக்குத் தொடர்பேன்? நாமே நேரில் வாங்கிக்கொள்ளலாமே!

ஒரு நீக்ரோவுக்கு நோபிள் பரிசு

தோழர் ரால்ப்பஞ்ஜ் மினக்கு நோபிள் பரிசு அளிக்கும் விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. நார்வே மன்னர் ஹாக்கனும்இதர அரசக் குடும்பத்தினரும் இவ்வைபவத்திற்கு வந்திருந்தனர்.

இக் கௌரவத்தைப் பெறும் முதல் நீக்ரோ தோழர் பஞ்ஜ்தான். இதுவரை நோபிள் பரிசு வாங்கிய இளைஞர்களில் இவர்தான் இரண்டாவது.

யார் கூறுவதை நம்புவது?

(o)

'முதலுக்கே மோசம் வந்துவிடும்' உழவு இலாக்கா அதிகாரி

(0)

விரைவில் 8 அவுன்ஸ் அரிசி தரப்படும் உணவு அமைச்சர்

(:0:)

49 லட்சம் டன் தானியம் பற்றாக்குறை இந்திய உதவியமைச்சர்

சென்னை, டிச. 10—

"சென்னை மாகாணத்தில் நெல் விளையும் நிலம் 88 லட்சம் ஏக்கர். அதில் மழையின்மையால் பாதிக்கப்பட்டது 42 லட்சம் ஏக்கர். உணவு உற்பத்திப் பெருக்கின் மூலம் 2,20,000 டன் தானியம் சென்ற ஆண்டு கிடைக்குமென அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால் கிடைத்தது ஒரு லட்சம் டன் தானியமே. இவ்வாண்டு 5,50,000 டன் தானியம் கிடைக்குமென்று திட்டமிடப்பட்டது. மழையின்மையாலும் வெள்ளத்தாலும் முதலுக்கே மோசம் வந்துவிடும்போலிருக்கிறது"

என்று உழவு இலாகா அதிகாரி தோழர் ஆர். எம். சுந்தரம் கூறுகிறார்.

* * *

"அடுத்த மாதம் முதல் கிராம உணவு ரேஷனை ரத்து செய்ய அரசாங்கம் எண்ணியிருக்கிறது. ரத்து செய்த பின் மக்கள் பட்டினி கிடக்காமல் இருக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும். முனிசிபல் நகரங்கள் 8 அவுன்ஸ் அரிசியுட்பட 12 அவுன்ஸ் ரேஷன்தர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது"

என்று சென்னை உணவு இலாகா அமைச்சர் தெரிவிக்கிறார்.

* * *

"நம் நாட்டில் இப்போது அரிசி 25 லட்சம் டன்னும், கோதுமை 6 லட்சம் டன்னும், தானிய வகைகள் 18 லட்சம் டன்னும் பற்றாக்குறையாக இருக்கிறது. இந்த 49 லட்சம் டன் தானியப் பற்றாக்குறையை ஈடு செய்வதே அரசாங்கத்தின் உட்கிடக்கையாகும்" என்று மத்திய அரசாங்க உணவு இலாகா உதவி அமைச்சர் கூறுகிறார்.

அடுத்த ஆண்டு மொத்தம் 60 லட்சம் டன் உணவுப்பொருள் குறைவு நம் நாட்டிற்கேற்படும் என்று கருதப்படுகிறது. இதில் சென்னை, பீஹார், பம்பாய் மாகாணங்களே பற்றாக்குறை மாகாணங்களாம். பீஹாருக்கு 24 லட்சம் டன்களும், பம்பாய்க்கு 8 லட்சம் டன்களும், சென்னைக்கு 8 அல்லது 9 லட்சம் டன்களும் தேவைப்படலாம் என்று மத்திய அரசாங்க உணவு அமைச்சரால் கருதப்படுகின்றது. சென்னை அமைச்சர் சென்னை மாகாண மக்களுக்கு வேண்டியிருக்கும் முழு அளவையும் அரிசியும் தானியங்களும் சேர்த்துச் சற்றேறக் குறைய 25 லட்சம் டன்கள் சென்னை வந்து சேருமாறு வற்புறுத்த வேண்டும்.

* * *

நாட்டிலே பற்றாக்குறை யிருப்பதறிந்த மத்திய அரசாங்கம், இக்குறையைப் போக்க, வெளிநாடுகளிலிருந்து தானியங்களை வரவழைக்காமல் வரட்டு வேதாந்தங்களைப் பேசிக்கொண்டிருக்கிறது.

சென்னையிலோ நிலைமை முதலுக்கே மோசமாயிருக்கிறதென்று அதிகாரி கூற, அரிசியை இன்னும் இரண்டு அவுன்ஸ் கூட்டித் தருவதாக அமைச்சர் கூறுகிறார். இவர்களுள் எவரை நம்புவது?

மாலை மணி

சென்னை 12—12—50 செவ்வாய்க்கிழமை

எப்படி நம்புவது?

காங்கிரஸ்காரர் தேர்தல்களை எவ்வாறு நடத்தினார்கள், எவ்வாறு நடத்துகிறார்கள், இனி எவ்வாறு நடத்தப் போகிறார்கள் என்பதைப் பொது மக்கள் நன்கறிதல் வேண்டும்.

தேர்தலை என்றாவது காங்கிரஸ்காரர்கள் ஒழுங்காக நடத்தினார்களா? இனித்தான் அவர்களால் ஒழுங்காக நடத்த முடியுமா? ஒழுங்காக நடந்துகொள்வார்களா என்பதை, அவர்களுள் ஒருவரே அவர்களைப்பற்றிக் கொடுத்திருக்கும் நற்சான்று மூலமாகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

ஆசார்ய கிருபளானி அழுத்தமான காங்கிரஸ் பக்தர்; காந்தியடிகளின் பரம சீடர். காங்கிரஸ் மாசபையின் பொது அமைச்சராயிருந்து அதன் நடை முறையை நன்கு அறிந்தவர். காங்கிரஸ்காரர்களின் கருத்து, போக்கு முதலியவற்றை நன்கு அறிந்தவர்.

இத்தகைய தலைவர் காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் பல தில்லுமுல்லுகள், வஞ்சகங்கள், ஒழுங்கீனங்கள் நடத்தியிருப்பதாகக் கூறுகிறார். சாதாரண அங்கத்தினர் பதவியிலிருந்து தலைவர் பதவிக்குரிய தேர்தல்வரை மிகவும் மோசமான ஒழுங்கீனமான வஞ்சகச் செயல்கள் நடைபெற்றிருக்கின்றன என்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறவில்லை என்றும் அவர் கூறுகிறார். காங்கிரஸ் தேர்தல்களில் எங்கெங்கு இவ்வாறு வஞ்சகங்களும் ஒழுங்கீனங்களும் நடைபெற்றிருக்கின்றனவோ, அங்கிருந்தெல்லாம் அவை பற்றிய தகவல்கள் அனைத்தும் தமக்குத் தக்க ஆதாரங்களுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று சுற்றறிக்கை விட்டிருக்கிறார்.

இவற்றிலிருந்து காங்கிரஸ்காரர்கள் போக்கு, பொது மக்களுக்கு விளக்கமாக அறியக்கிடக்கின்றதன்றோ! காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சித் தேர்தல்களில் மட்டுமேயன்றி, எல்லாத் தேர்தல்களிலும் இதே போன்றுதான் நடந்துகொள்வார்கள், நடந்துகொள்கிறார்கள். நடந்துகொண்டிருப்பார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று மிகத் தெளிவாக அறியக் கிடக்கின்றதல்லவா!

இத்தகையவர்கள் இன்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ளார்கள். தேர்தல்களில் மோசமான தில்லுமுல்லுகளைச் செய்து, நியாயமான முறையில் தேர்தலை நடத்தவொட்டாது செய்பவர்கள் என்று அவர்களுடைய தலைவர் ஒருவராலேயே நற்காட்சியளிக்கப்படும் காங்கிரஸ்காரர்கள் பொதுத் தேர்தலை மட்டும் ஒழுங்காக, நியாயமாக நடத்துவார்கள் என்று எப்படி நம்பமுடியும்?

பொதுத் தேர்தலுக்குரிய நாள் காலவரையறையின்றித் தள்ளிப் போய்க்கொண்டிருப்பதொன்றே காங்கிரஸ்காரர்களின் உள்ளக்கிடக்கையை விளக்கப் போதுமானதாயிருக்கிறதென்றாலும், இவர்களுடைய ஆட்சி அதிகாரத்தின் கீழ்ப் பொதுத் தேர்தல் நடைபெறுவதாயின், ஊழல்கள் மலிந்து, நியாயமற்ற முறைகள் பெருகுமே ஒழிய, நியாயமான முறையில் தேர்தல் நடந்து, விடுமென்று பொது மக்கள் நம்புவதற்கு இடமுண்டா? காங்கிரஸ் என்னும் சொல்லுக்கே ஒழுங்கீனம்—ஊழல் என்று பொருள் கொள்ளக் கூடியவாறு காங்கிரஸ் தோழர்கள் அப்பெயரையே பாழ்படுத்திவிட்டார்கள். பதவி மோகமும், சுயநலமும் மனத்தைக் கவிந்துகொண்டிருந்தால், நிலைமை இவ்வாறுதான் ஆகும் என்பதை விளக்கவா வேண்டும்?

தென்னாற்காட்டில் லிக்னைட் ஏராளமாக கிடைக்கிறது

வாஷிங்டன், டிச. 11—

இதுவரை கவனியாமல் புறக்கணிக்கப்பட்டுவந்த லிக்னைட்டிலிருந்து பல காரியங்களுக்குப் பயன்படும் 'காஸ்'ஸைத் தயாரிக்கலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

சமையல் முதலியவைகளை செய்வதற்கு கரியடுப்புக்குப் பதில் இந்த 'காஸ்' உபயோகப்படுமென்பதுடன் காஸோலைன் சாயங்கள், அமோனியா முதலியவைகளும் தயாரிக்க முடியும் என்று கூறப்படுகிறது. இந்த லிக்னைட்டுக்கு பழுப்பு நிலக்கரி என்று மற்றொரு பெயரும் உண்டு.

இந்த லிக்னைட் உலகின் பல பாகங்களில் கிடைக்கிறது. இந்தியாவில் இது ஏராளமாக கிடைக்கிறதாம் (தென்னாற்காட்டில் இவை அதிகம் கிடைப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது,

பர்மா, மலேயா, ஜப்பான் கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய இடங்களில் இவை அபரிமிதமாகக் கிடைக்கின்றன.

யுனைடெட் ஸ்டேட்வில் மட்டும் 900,000,000,000 டன் இருக்கிறதாம். பிரிட்டனில் நல்ல நிலக்கரி நிறையக் கிடைப்பதால் இதை லட்சியம் செய்வாரில்லை.

சி. என். அண்ணாதுரை

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களின் சுற்றுப் பிரயாணம் பின் வருமாறு:—

16—12—50 குறிஞ்சிப்பாடி
17—12—50 திருச்செங்கோடு
18—12—50 பவானி

முதலிய இடங்களில் தனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு 19—12—50 சென்னை திரும்புவார்.

வட சீனாவில் ஏராளமான ரஷ்யர்கள்

ஹாங்காங், டிச. 11—

சீனாவில் பெரும் அளவில் யுத்த முஸ்தீபுகள் செய்யப்பட்டு வருவதாக சீனாவிலிருந்து இங்கு வந்துள்ள அயல் நாட்டு வியாபாரிகள் கூறுகின்றனர்.

பீகிங், ஷாங்கே, மூக்டன் முதலிய நகரங்களில் ஏராளமான ரஷ்ய ஆலோசகர்கள் ரஷ்ய ராஜதந்திரிகள், ரஷ்ய ராணுவ அதிகாரிகள் ரஷ்ய டெக்னீஷியர்கள் காணப்படுவதாக கூறுகிறார்கள்.

மஞ்சூரியா அநேகமாக ரஷ்யக் கட்டுப்பாட்டுக்குட்பட்டே இருக்கிறதென்று கூறலாம் என்று சொல்லப் படுகிறது. சீன ராணுவத்தில் இப்போது அதிகம் பேர் சேர்க்கப்பட்டு வருகிறார்கள் என்றும் விமான நிலையங்கள் விஸ்தரிக்கப் படுகின்றனவென்றும் கூறப்படுகிறது.

தோழர் எஸ். குருசாமிக்கு கோர்ட் கலையும் வரை தண்டனை

திராவிட கழகச் செயலாளரும், 'விடுதலை' பத்திரிகை ஆசிரியருமான தோழர் எஸ். குருசாமி 10-12-50 ஞாயிற்றுக்கிழமை வடநாட்டுச் சாமான் தடுப்பு மறியல் கமிட்டியார் கேட்டுக்கொண்டபடி சைனா பஜார் ரோட்டிலுள்ள வடநாட்டு கடை முன் மறியல் செய்தார். போலீசார் இவரை கைது செய்து 11-12-50 காலை மாஜிஸ்ட்ரேட் முன் வழக்குத் தொடர்ந்தனர். மாஜிஸ்ட்ரேட் இவருக்கு கோர்ட் கலையும் வரை தண்டனை அளித்தார். அதற்கிணங்க உடனே விடுதலை செய்யப்பட்டு வழக்கப்படி விடுதலை ஆபீஸுக்கு வந்து தனது தினசரி அலுவலை கவனித்து வருகிறார்.

நரபலியிடப்பட்ட தீவு

மெக்ஸிக் வளைகுடாவிலுள்ள ஒரு தீவில் 8-வது நூற்றாண்டு காலத்திய மட்பாண்டங்களும் இதர எலும்புக் கூடுகளும் அகப் பட்டிருக்கின்றனவாம்.

அந்தக்காலத்தில் நரபலி கொடுப்பதற்கு வாலிபர்களையும் யுவதிகளையும் இத்தீவிற்குதான் அழைத்துச் செல்லப்படுவது வழக்கமாம்.

16வது நூற்றாண்டில்தான் இம்மாதிரி ஒரு தீவு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அங்கேயும் ராம ராஜ்யம்

கேப்டவுன், டிச. 11—

தன் உத்திரவை புறக்கணித்து தன்னைப்பற்றி செய்தியைபிரசுரித்த ரேண்ட் டெய்லி மெயில் பத்திரிக்கையை சர்க்காரின் எல்லா இலாக்காக்களும் அடியோடு பகிஷ்கரிக்க வேண்டும் என்று தென்னாப்பிரிக்க பிரதமர் மலான் உத்திரவிட்டிருக்கிறார்.

முன்பு சர்க்கார் அறிக்கைகள் எதுவும் இப்பத்திரிகைக்கு அனுப்பக் கூடாது என்று மலான் உத்திரவு பிறப்பித்திருந்தது நினைவிருக்கும்.

தொழிலாளர்க்குகந்த நடனம் தேவை

லண்டன், டிச. 11—

மேனாட்டாரின் நடனங்களில் ரம்பா, ஸ்விங்ஸம்பா, பூகி, வூகி முதலிய நடனங்கள் ஏகாதிபத்திய வெறியர்கள்—முக்கியமாக அமெரிக்க பணமூட்டைகள்-கையாளும் நடனம் என்றும் இவைகளால் கலாசார அபிவிருத்தியே குலைந்து போகிறது என்றும் ஹங்கேரிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் கண்டிக்கிறார்கள்.

இவ் விவரத்தை வெளியிட்டு 'கல்ட்சர்டு பீபிள்' என்றபத்திரிகை எழுதியிருப்பதாவது:—

ஸோவியத் முறையில் புது நடன கலாசாரம் ஏற்பட வேண்டியது அவசியம்.

டோங்கோ பாகஸ்லூட், வால்டஸ் இவைகள் முதலாளித்துவத்தின் சீர்குலைவை பிரதிபலிக்கும் நடன வகைகளாகும். இவைகளு தொழிலாளர்களின் மனப்பா மைக்கு உகந்ததல்ல வென்று இவைகளை இதற்குள் எதிர்ப்பது சரியல்ல.

அமெரிக்காவின் யுத்த முஸ்தீபு

வாஷிங்டன், டிச. 11—

அமெரிக்காவில் யுத்த விமானங்களின் உற்பத்தி வெகுவாக அதிகரித்திருக்கிறது.

சமூக உரிமை நீதி மாநாடு

வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறைக்காகப் போராடவேண்டுமென்ற நோக்கத்தோடு கட்சி சார்பற்ற மாநாடு மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் டிசம்பர் 27-ந்தேதி நடைபெறுவதற்கேற்ற ஏற்பாடுகள் யாவும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருவதாக தோழர் பொற்செல்வி இளமுருகு எழுதுகிறார்.

புல்லேந்திகளே வாளேந்தி முன்வாருங்கள்!

(0)

பிராமணர்களுக்கு இந்துமகாசபை அழைப்பு

:o:

நாட்டில் கலகத்துக்கு வித்திடப்படுகிறது

வேலூர், டிச. 9—

வேலூர் கோட்டை மைதானத்தில் இந்துமகாசபைக் கூட்டம் தோழர் வி. ஜி. தேஷ்பாண்டே தலைமையில் நடைபெற்றபோது.

"பிராமணர்கள் தங்கள் முன்னோர் தர்மத்தை நிலைநிறுத்த வேண்டுமானால் ஒவ்வொருவரும் வாளேந்தி முன்வரவேண்டும். நாட்டில் பிராமண தர்மம் நிலைக்கவேண்டும்"

என்று ஒருவர் கூறினர். மிக நல்ல யோசனை. சிறு குழந்தைகளிடம் க்ஷவரக் கத்தியைக் கொடுத்துவிட்டால், அதனால் குழந்தைகளுக்கும் ஆபத்து; மற்றவர்களுக்கும் ஆபத்து. இதுபோன்றதுதான் இந்துமகாசபைத் தோழர் புல்லேந்திகளான பிராமணர்களை வாளேந்தி வெளிக்கிளம்பச் சொல்வதுமாகும். நாட்டிலே பிராமணர்கள் தங்கள் முன்னோர் தர்மத்தை நிலைநிறுத்த வேண்டுமானால், வாளேந்த வேண்டியதில்லையே. பழையபடி வேதம் ஓதுதல். வேதம் ஓதக்கூடிய சாதியாரை வேதம் ஓதுவித்தல், இரந்துண்ணல் முதலிய பழைய சனாதன தர்ம முறையைக் கையாண்டால் போதுமே. பிராமணன் உத்தியோகங்கள் வகிப்பானேன்? செருப்புக்கடை, மயிர்நீக்கும்கடை, இறைச்சியுணவு பரிமாறும் கடை, சனாதன தர்மப்படி சூத்திரர்களுக்குச் சோறுபோடும் கடை, இன்னும் மற்றப் பல கடைகளை வைத்துக்கொண்டு வர்த்தகம் செய்வரானேன்?

இவற்றையெல்லாம் அடியோடு விட்டுவிட்டுப் பழைய தர்மத்தை அனுசரித்து ஒதுங்கிவிட்டரல், அவர்களைக் குறைகூறவும் ஆள் இருக்கப்போவதில்லை; அவர்கள் தங்கள் பரம்பரை இயல்பை மீறி வாள் ஏந்திக் கொண்டுவந்து அவதிப்படவும் வேண்டியதில்லையே. அவர்கள் சனாதன தர்ம ஆசாரத்தை மீறி, பிறமக்களுடைய தொழில்களில் ஈடுபட்டு, அனாசாரமாகிவிட்டதுதான், பிராமண தர்மம் நிலைநிற்காமல் ஆட்டங்கண்டுவிட்டிருக்கிறது. அவர்கள் பழையபடி மனுமகாராஜன் கூறியிருக்கிறபடி தங்கள் சொந்த தர்மத்துக்குத் திரும்பிவிடட்டும் நாட்டிலே ஏன் இந்தத் தொல்லை? புல்லேந்தும் கை வாளேந்தவேண்டிய அவசியமேன்?

தர்மம் இவ்வாறு நசித்துவிட்டதால்தான் மழைகூடப் பெய்வதில்லைபோலும். எனவே இந்துமகாசபையினராவது முன்வந்துபழைய சனாதன தர்மத்தை அனுசரித்து, பிராமணர்கள் சலவைசெய்த துணிகளை உடுத்தாமலும், பிறமக்களிடையே கலந்து குடியிருக்காமலும், ரஜோகுண உணவுகளைத் தின்னுமலும், வர்த்தகத்துறை, உத்தியோகத்துறை, அரசியல்துறை முதலியவற்றில் தலையிடாமலும், ஆத்மார்த்தத்துறையில், ஈடுபட்டு, உலகுய்ய யாகயோகங்களைச் செய்துகொண்டிருக்குமாறு செய்யலாமே. செய்யவேண்டிய வேலையைவிட்டு தர்மத்துக்கு விரோதமாக வாளேந்த அழைப்பானேன்? பேசிய தோழருக்குத் தர்மம் என்பது என்னவென்று தெரியாததுதான் இதற்குக் காரணம் போலும்!

நீச்சுப் போட்டிக்கு 3 வயது பெண்

லண்டன், டிச. 9—

இங்கிலீஷ் கால்வாயைக் கடக்கும் பந்தயம் வருகிற கோடையில் நடைபெறவிருக்கிறது.

உலகின் பல பாகங்களிலிருந்து வரும் 20 நீச்சு நிபுணர்கள் இதில் பங்கெடுத்துக் கொள்வர்.

யுனைடெட் ஸ்டேட்ஸிலிருந்து 5 வயது பையனும் 3 வயது பெண்ணும் இதில் பங்கெடுத்துக்கொள்ளவிருக்கின்றனர்.

சர்வதேச சித்திரப் போட்டி

லண்டன், டிச. 11—

கெய்ரோ சித்திர சங்கம் நடத்தும் சர்வதேசபோட்டியில் 5 வயது முதல் 13 வயது வரையிலுள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பங்கெடுத்துக் கொள்ளவிருக்கின்றனர். இதில் முதல் பரிசு பெறுபவர்கள் எகிப்திலுள்ள பிரமிட் ஸ்பிங்ஸ் முதலிய அரிய காட்சிகளைக் காண இலவசமாக அழைத்துச் செல்லப் படுவார்களாம்.

பொள்ளாச்சி: 8—12—50-ல் பீடித் தொழிலாளர் ஜெனரல்பாடி கூட்டம் நடைபெற்றது. அதில் கூலி உயர்வு கேட்டால் முதலாளிகள் 'நஷ்டம்' என்று மறுக்கிறார்கள். இதனால் தொழிலாளர் பீடி பேக்டரி ஆரம்பித்து நடத்த சங்கத் தலைவர் ராமானுஜத்துக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

திருத்தம்

திராவிடநாடு அலுவலகத்தில் போலீஸார் என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் "அதாவது 15-12-50 பகிரங்க ஏலத்தில் விடப்படும்" என்பதை 14-12-50 என்று மாத்திரம் திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.-ஆசிரியர்

சுதந்தரநாட்டில் நெசவாளர் திண்டாட்டம்

சேலம்: 6-12-50ல் கைத்தறி நெசவாளர் பொதுக்கூட்டம் சித்தையன் தலைமையில் நடந்தது.

கைத்தறி நெசவாளர்கள் நூல் கிடைக்காமல் பசியும், பட்டினியும் கிடந்து, கூலிகளாயும், சூளையில் வேலை செய்தும், இன்னும் பலர் வேலையில்லாமலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும் என பேசினர்கள்.

இந்த நிலையை மேலும் வளரவிடாமல் அவர்கள் திண்டாட்டத்தைப் போக்க அவசரமும் அவசியமுமான நடவடிக்கை எடுக்கும்படி நூல் சப்ளை கமிஷனரையும், மத்திய சர்க்கார் கைத்தொழில் மந்திரியையும் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் சேலத்தை கைத்தறி நெசவுக்கு முக்யத்துவம் பெற்ற இடமாக அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

சேலத்தில் 1,10,000 கைத்தறிகள் இருக்கின்றன. இவற்றிற்கு ஓரளவேனும் வேலைகொடுக்க வேண்டுமானால், மாதாமாதம் குறைந்த பட்சம் 3000 பேல் நூல் தேவை. ஆனால், 300 பேல்கூடக் கொடுக்கப் படவில்லை என்றால் இவர்கள் கதி என்னவது? இதன் பலன்தான் பட்டினி நிலை.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

15—12—50

கண்டவராயன்பட்டி (தேவகோட்டை)

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

16—12—50

சோக்கநாதபுரம் (மானாமதுரை)

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

17—12—50

சென்னை (ராபின்சன் பார்க்)

தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, பி. ராமசாமி, பி. வி. முத்துசாமி.

திருச்செங்கோடு

தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

கீழச்சந்தைப்பேட்டை, (மதுரை)

தோழர்கள் எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், எஸ். முத்து, எஸ். சி. மாணிக்கம், எம். அய்யாச்சாமி.

18—12—50

சின்ன சேலம்

தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், ஈரோடு அப்பாவு.

படையில் சேர வாரீர் வீர இளைஞர்காள்!

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர்களுக்கு வேண்டுகோள்

1951 ஜனவரி மாதத்தில் திருச்சியில், "உழவர் மாநாடு", "பஞ்சாயத்" மாநாடுகள் நடைபெறுகின்றன. மாநாட்டுக்கு முதல் வாரம் திருச்சி மாவட்டத்தில் 1. ஜெயங்கொண்டசோழபுரம், 2. கரூர் 3 புதுக்கோட்டை, 4. மணப்பாறை இவ்வூர்களிலிருந்து, பிரசாரப் படைகள் புறப்படுகின்றன. இப்படைகள் ஒரு வார காலம் கால்நடையாகப்புறப்பட்டு, திருச்சி வந்து சேரும். படைகள் வரும் போது அந்தந்த இடங்களில் படைகளுக்குச் சிற்றுண்டி, உணவு, தங்கும் இடம் இவைகளுக்குத் தக்க ஏற்பாடுகளை வரவேற்புக் கமிட்டியார் செய்து தருவார்கள். இப்படையில் கலந்துகொள்ள விரும்பும் தோழர்கள் தங்கள் முழு விலாசத்துடனும், தங்களைப் பற்றிய முழு விவரத்துடனும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதக் கேட்டுக் கொள்கிறோம். படை வரும் பொழுது வழியில் உள்ள எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும், பொதுக் கூட்டங்கள் கூட்டிக் "கிராமச் சீர்திருத்தம்", "பொருளாதார வளர்ச்சி", "உணவு உற்பத்திப் பெருக்கம்" போன்ற விஷயங்களைப்பற்றிப் பிரசாரம் செய்து வருவார்கள்.

தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., விருத்தாசலம் முனுசாமி, சேலம் சித்தையன், அழகரடிமுத்து, சி. பி. சின்னராஜு முதலியவர்கள் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வார்கள். கடிதம் எழுதவேண்டிய முகவரி:—

"உழவர் மாநாடு" நிலயம்
"கருணாநிதி பார்க்"
தெப்பக்குளம் போஸ்டு
திருச்சினாப்பள்ளி.

கழகத் தோழர்களுக்கு!

திராவிட முன்னேற்ற கழக நிகழ்ச்சிகளையும். ஆங்காங்கு நடைபெறும் கழக கூட்டங்களின் விவரங்களையும் உடனுக்குடன் "மாலை மணி" அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். — ஆசிரியர்

சிற்றூர் விற்பனையாளர்

தமிழ் நாடு முழுமையிலும் உள்ள சிற்றூர்களுக்கு 'மாலைமணி' விற்பனையாளர் தேவை. அவர்கள் ரூபாய் பத்து முன்பணம் அனுப்பி வைத்தால் அவர்களுக்கு பத்து பிரதிகள் தினசரி அனுப்பி வைக்கப் படும். விற்பனை கழிவு 25% வீதம் அளிக்கப்படும். விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" அலுவலகம்
மண்ணடி—சென்னை.

கழக நடவடிக்கைகள்

செயங்கொண்டான்:—20-10-50 ல் தோழர் இளநாகன் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில், தி. மு. க. கிளை ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டு, கீழ்கண்டவர்களை நிர்வாக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் ச. இளநாகன், துணைச் செயலாளர் கு. இலக்குமணன், பெருமாள், பா. இரா. கூத்தரசன், விளம்பர உறுப்பினர் ஆ. இராமசாமி மற்றும் 9 பேர்களடங்கிய நிர்வாகக் குழுவினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை, குன்றத்தூர் ஆகிய இடங்களில் அமைதியாக நடந்து கொண்ட கழக வீரர்களையும், பொது மக்களையும் தடிகொண்டு தாக்கியும், துப்பாக்கி பிரயோகம் நடத்தியதை வன்மையாகக் கண்டிக்கிறது. செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

பழனி: 1-12-50 அன்று நகர தி. மு. கழகத்தின் சார்பில் தோழர் நா. அமுது தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது கழகக் கொள்கைகள் பற்றியும், நெசவாளர்களின் குறைகள் பற்றியும் தோழர்கள் அ. தமிழரசு, கோபி. ஜி. என். இராசு, ஈரோடு என். இ. பாலகுரு ஆகியோர் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின் நெசவாளர் குறைகளைக் களைய வேண்டிய ஏற்பாடுகளை செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

* * *

கிருஷ்ணகிரி:—4-12-50 ல் தி. மு. க. பொதுக் கூட்டம் எஸ். நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது. குன்றத்தூர் தடியடியின் அக்கிரமத்தைப்பற்றியும், அரிசிப் பஞ்சத்தைப் போக்க வகை செய்யாத சர்க்கார் நிர்வாகத் திறமையைப் பற்றியும் பேசப்பட்டது. கூட்டத்திற்கு ஏராளமான மாணவர் வந்திருந்தனர்.

* * *

ஒடசம்பட்டி:—5-11-50 இவ்வூர் தி. மு. க. செயற்குழு கூட்டம் கூடியது. கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குண்ணத்தூர் தடியடியை நடத்திய சர்க்காரை வன்மையாக கண்டிக்கிறது. இனி அவ்வாறு நடத்தக் கூடாதென கேட்டுக் கொள்கிறது. வட நாட்டுச் சுரண்டலை எதிர்க்க அண்ணாவின் அழைப்பை எதிர்பார்க்கிறது.

* * *

வர்லாஜா பேட்டை:—தி. மு. க. பொதுக் கூட்டம் 2-12-50-ந் தேதி அறிஞர். கா. அப்பாதுரையார் எம். ஏ. எல். டி. தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் ஆரியர், திராவிடர் வரலாற்றை ஆராய்ச்சியுடன் விளக்கிப் பேசினார். பின்னர் "திராவிடன்" ஆசிரியர் தோழர் என். வி. நடராசன், ஆளவந்தாரின் ஆணவப் போக்கைக் குறித்தும், பார்ப்பனீயத்தின் சூழ்ச்சிகளைக் குறித்தும் விளக்கமாகப் பேசினார். பின்னர் ஆற்காடு தோழர் ஆர். நடராசன் பேசிய பிறகு கூட்டம் முடிவுற்றது.

* * *

சென்னை:—சென்ற 4-12-50 திங்கட் கிழமை மாலை 7 மணிக்கு சோலையப்பன் தெரு 112 எண் இல்லத்தில் சென்னை 4-வது வட்ட தி. மு. கழக செயற் குழுவினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது 4-வது வட்ட தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கு தேவையானதும், முக்கியமானதுமான 5 தீர்மானங்களை குசிகரமான விவாதத்தின் முடிவிலே கொண்டு வந்தனர்.

அரண்தாங்கி:—தி. மு. க. கிளையின் கூட்டம் 4-12-50 ல் சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன் ஆகியோரைக் கொண்டு பொங்கல் விழாக் கொண்டாடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

* * *

ஒரக்காட்டுப் பேட்டை: தி. மு. கழகம் 25-11-50 இரண்டாம் ஆண்டு செயற்குழு கூட்டம் கு. ச. கோவிந்தசாமி அவர்கள் இல்லத்தில் இரவு 7-30 மணிக்கு நடைபெற்றது. புத்தாண்டுக்கென கீழ்க்கண்ட நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் சோ. சி. சண்முகம், துணைச் செயலாளர் சோ. கு. சம்பந்தன், பொருளாளர் கு. ச. கோவிந்தசாமி, துணை பொருளாளர் த. வேணு, விளம்பர உறுப்பினர் கோடி. ஆ. கணபதி, நிர்வாகஸ்தர்கள் வை. போ. முத்து, வை. துரைசாமி, ச. போரூரான், பா. ரா. கண்ணன், செ. மா. தி. மு. கழக உறுப்பினர் சோ. மு. சம்பந்தன், கு. மு. இளங்கோ, இவர்களை கமிட்டி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

7-12-50 ல் மாதாந்தரக் கூட்டம் செயலாளர் இல்லத்தில் கு. ச. கோவிந்தராசு தலைமையில் கூடியது, மாதாந்தர வரவு-செலவு கணக்கையும் பரிசோதிக்கப்பட்டது. பின்னர் அரசியலாரின் போக்கு திராவிட முன்னேற்றக் கழக குறிக்கோள் என்பது பற்றி பலர் பேசினர். பிறகு ஆண்டு விழா நடத்துவதற்கான நிதி வசூலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

என் லட்சியக் கணவன்

ஸாலிஸ்பரி, டிச. 11—

ஸாலிஸ்பரி மேயருக்குள்ள எவ்வளவோ வேலைகளில் கணவன்மார்களை கண்டுபிடித்து தகவல் தெரிவிக்கும்படி வரும் கடிதங்களுக்கு பதில் எழுதுவதும் ஒரு முக்யமான வேலை என்று தெரிகிறது.

தனக்கு இம்மாதிரி கணவன் அம்மாதிரி கணவன் தேவை என்றெல்லாம் தெரிவித்து பல ஸ்திரீகள் இவருக்கு கடிதம் எழுதுகிறார்களாம்.

ஒரு பெண், தனக்கு யுத்தத்தில் கைகால் இழந்த ஒருவர் கணவராக கிடைக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

42 வயதுள்ள ஒரு பெண் தனக்கு 25 வயது 50 வயதுக்குட்பட்ட ஒரு கணவன் வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

ஒரு பெண் தனக்கு எத்தகைய கணவன் வேண்டும் என்பதைப் பற்றி விவரமாக பின்கண்டவாறு எழுதியிருக்கிறார்:—

"என்னை மணக்க வருபவர் பணக்காரராக இருக்கவேண்டும். சுத்தமாக கோபமில்லாமல், சுத்தமாக க்ஷவரம் செய்தவராக இருக்க வேண்டும். நல்ல ஞாபக சக்தி, அழகிய பல் வரிசை, பிறந்தின விழாக்களைக் கொண்டாடுவதில் ஆசை இவ்வளவும் இருப்பது அவசியம்.

அவர் காமவெறியனாக இருக்கக் கூடாது. ஸ்தூல சரீரம் கூடாது. வியர்வை அடிக்கடி ஏற்படும் உடம்புள்ளவராக இருக்கக் கூடாது.

'மாலை மணி' பொங்கல் மலர்

அறிஞர் அண்ணா, தமிழ்ப்பெரியார் திரு. வி. க. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பழகன், வியாழன், சிற்றரசு, ஈ. வே. கி. சம்பத், கா. அப்பாதுரை, சோமசுந்தர பாரதியார், அரங்கண்ணல், இராதாமணாளன், மற்றும் பிற அறிஞர்களின் அரிய கட்டுரை, கவிதைகளுடன் வெளிவருகிறது.

விலை அணா 4 தான்

வெளியூர்த் தோழர்கள் முன்னதாக ஏஜெண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும்.

விளம்பரம் செய்வோர், அலுவலக நிர்வாகிக்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளவும்.

கோடிக்கணக்கில் கள்ளச் சந்தை வாணிகம்

அரசாங்கத்தின் இழிநிலை

சணல் வாணிகத்தின் சீர்கேடு

"சணல் வாணிகத்தில் கள்ளச் சந்தை நடைபெறுகிறது. கண்ட்ரோல்கள் சரியாக நடைபெறவில்லை. பல கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள கள்ளச் சந்தை வாணிகம் நடைபெறுகிறது. இந்தியாவில் டாலர்களுக்கான கள்ளச் சந்தை சிறப்பாக நடைபெறுகிறது. இந்த டாலர்கள் ஹாங்காங் (சீன) மார்க்கட்டில் வெளிப்படையாக விற்பனை செய்யப்பட்டுத் தங்கம் வாங்கி, அத்தங்கம் நம் நாட்டிற்குக் கள்ளத்தனமாகக் கொண்டு வரப்படுகின்றன. 20, அல்லது 30 ரூபாய்க்கு எவனாவது கள்ளச் சந்தை வாணிகம் செய்தால் அவனைக் கைவிலங்கிட்டுத் தெருவலம் செய்ய விரும்பும் அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கள்ளச் சந்தையில் பெறும் பெரிய மனிதர்களை, பெரிய மனிதர்களாக மதித்து மரியாதை செய்கிறது அரசாங்கம். இதுதான் நம் அரசாங்கத்தின் இன்றைய சட்டமாக இருக்கிறது"

என்று ராமநாதகோயங்கா மத்திய பார்லிமெண்டில் கூறினார்.

வேண்டுகோள்!

திராவிட முன்னேற்றக் கழக உட்கிளைகளை ஆங்காங்கு ஆரம்பித்தவுடன் அதன் நிர்வாகஸ்தர்களுடைய விவரங்களை உடனுக்குடன் ஒரு பிரதி "மாலை மணி" அலுவலகத்திற்கும் மற்றொரு பிரதி தலைமை அலுவலகம்; 202, தங்கசாலை வீதி, சென்னை-1. என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். "மானேஜர்"

இனி நடப்பவை

சின்னசேலம்:—கழகத்தின் சார்பில் 18—12—50 திங்களன்று மாலை 5-30-மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அல்வமயம் திரு. ஈ. வே. கி. சம்பத், ஈரோடு அப்பாவு பேசுவார்கள்.

ஸ்டேஷன்களில் பண்டம் விற்போர்

வைத்ய பரிசோதனை சர்டிபிகேட் பெறவேண்டும்

சென்னை, டிச. 11—

ரயில்வே ஸ்டேஷன்களில் உணவு சம்பந்தமான பொருள்களை விற்பவர்கள் 6 மாதத்திற்கொரு முறை வைத்ய பரீட்சைக்கு உட்படவேண்டும் பத்திரிகை முதலியவைகள் விற்பவர்கள் ஒருவருஷத்திற்கு ஒரு முறை இதற்கு உட்படவேண்டும். வைத்ய பரீட்சை நடைபெற்றதை நிரூபிக்க சர்டிபிகேட் பெற்றிருக்க வேண்டும் என்றும் தென்னிந்திய ரயில்வே பிரதம கமர்ஷியல் (கேடரிங்) மானேஜர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்:

ரயில்வே வைத்ய அதிகாரிகளே இந்த வைத்திய பரீட்சையை நடத்துவர். இத்தகைய மெடிகல் சர்டிபிகேட்களை ஸ்டேஷனில் பொருள்கள் விற்பவர்கள் பெற்றிருக்கிறார்களா என்பதை கண்டறிய வேண்டும் என்று ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வியாதியஸ்தர்கள் இவைகளை விற்க விடாமல் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

சந்தா விவரம்

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

'மாலைமணி" பதிப்பகம்

மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty str..., Madras-1